# அமாவாசை பெருவிழா
# பிப்ரவரி 2019 சாட்சியங்கள்



**1. பாண்டிச்சேரி- மேரி கிளாரா**

18 வருடங்களாக எங்களுக்கு சொந்தமான கடையை வேறொருவர் அபகரித்து கொண்டு ஆண்டு வந்தார்கள். நான் தொடர்ந்து அமாவாசை ஜெபக்கூட்டத்தில் கலந்து கொண்டு அதற்காக ஜெபித்து வந்தேன். இப்போது கடை எங்களுக்கு சொந்தமாகி விட்டது. கடையை மீட்டுக்கொடுத்த ஆண்டவருக்கு நன்றி.



**2. அதனூர் பானுமதி**

என் கணவர் கை, கால்கள் செயலிழந்து சுயநினைவு இல்லாமல் இருந்தார். எண்ணெய் தடவி தொடர்ந்து ஜெபித்து வந்தேன், குணமடைந்தார். நான் பஸ்சில் பயணம் செய்யும்போது விபத்து ஏற்பட்டது. பற்கள் விழுந்து விட்டது, தலையில் வலி அதிகமாக இருந்தது, மேற்கொண்டு மருத்துவம் செய்ய போதிய பணம் இல்லை. இறைவனிடம் வேண்டிக் கொண்டேன். தொடர்ந்து எண்ணெய் தடவி ஜெபித்து வந்தேன். தலைவலி குணமானது, பற்கள் கட்டவும் உதவி கிடைத்தது, எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றி.

**3. ஆற்காடு - புதுமைமேரி**



என் மகளுக்கு 5 நாட்களாக தொடர்ந்து காய்ச்சல் இருந்தது, மருத்துவமனைக்கு சென்று பரிசோதித்துப் பார்த்ததில் இரத்த அணுக்கள் குறைவாக உள்ளது, டெங்கு காய்ச்சல் இருக்க வாய்ப்புள்ளது என்று கூறி விட்டார்கள். அன்று இரவு முழுவதும் ஜெபம் செய்தேன். மறுநாள் பரிசோதனை செய்ததில் 1,00,000 இரத்த அணுக்கள் இருந்தது. டெங்கு காய்ச்சல் இல்லையென்று கூறிவிட்டார்கள், ஆண்டவருக்கு நன்றி.



**4.எறையூர் - ஆரோக்கியம்மாள்**

எனக்கு இரண்டு பெண் குழந்தைகள் இருக்கிறார்கள். ஆண் குழந்தை வேண்டுமென்று ஜெபித்தேன். ஆண் குழந்தை பிறந்தது, ஆண்டவருக்கு நன்றி.

ஆண்டவரின் வியத்தகு செயல்களைக் குறைக்கவோ கூட்டவோ எவராலும் முடியாது;
அவற்றை ஆழ்ந்தறிய எவராலும் இயலாது. (சீ.ஞா.18:6)



**5. கண்டமாணடி - சந்துரு**
உடல்நிலை மற்றும் மனநிலை பாதிக்கப்பட்டு, மருத்துவரிடம் சென்றும் குணமாக வில்லை. எம்மாவுஸ்க்கு வந்து அமவாசை ஜெபக்கூட்டத்தில் கலந்து கொண்டு ஜெபித்தபிறகு குணமடைந்தேன் குணமாக்கிய ஆண்டவருக்கு நன்றி.



**6. எறையூர் - பெரியநாயகிமேரி** என் மகன் 10-ஆம் வகுப்பு படிக்கிறான். ஆனால் தினமும் பள்ளிக்கு செல்லவில்லை. இங்கு வந்து அவனுக்காக ஜெபித்துகொண்டேன். இப்போது அவன் பள்ளிக்கு செல்கிறான். எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றி.



**7. கூடப்பாக்கம் - சந்தனம்** 3 வருடங்களுக்கு முன்பு என் மகன் காணாமல் போய் விட்டான். இறைவனிடம் வேண்டிக் கொண்டேன. காணாமல் போன மகன் கிடைத்தான். ஆனால் நான் சாட்சி சொல்லவில்லை. ஆண்டவர் எனக்கு உணர்த்திக் கொண்டேயிருந்தும் சாட்சி சொல்லவில்லை. திடீரென்று பேத்திக்கு காய்ச்சல், வேண்டிக்கொண்டேன், குணமானது, நீண்ட நாட்களாக இருந்த மூட்டு வலியும் குணமாகிவிட்டது. என் மகன் திரும்பி வந்ததற்கும், என்னையும் பேத்தியும் குணமாக்கிய எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றி.



**8. வரதராஜன் - அந்தோணியம்மாள்** மகளுக்கு வேலை கிடைக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டேன், வேலை கிடைத்து விட்டது, எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றி.



**9. எறையூர் - அம்மு** ஒரு வாரமாக வயிற்று வலி இருந்தது, எண்ணெய் தடவி தொடர்ந்து ஜெபித்து வந்தேன், குணமானது. எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றி.



**10. பனிக்கன்குப்பம் - மோட்சராக்கினி** 2 வருடங்களாக கால்கள் செயலிழந்து நடக்க முடியாமல் இருந்தேன், 6 மாதமாக என்னை அமாவாசை ஜெபக்கூட்டத்திற்கு அழைத்து வந்தார்கள். தினமும் எண்ணெயை தடவி ஜெபித்து வந்தேன். இப்போது எனக்கு கால்கள் குணமாகி நன்றாக நடக்க முடிகிறது. குணமாக்கிய எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றி.

குழந்தாய், நீ நன்மை செய்யும்போது கடிந்துகொள்ளாதே;
கொடைகள் வழங்கும்போது புண்படுத்தும் சொற்களைக் கூறாதே. (சீ.ஞா.18:15)